தமிழாக்கம் செய்யப்பட்ட
அரசாணை

**சுருக்கம்**

நீதிப்பேராணைகள் – நீதிப்பேராணை மனு எண்கள் 25247/2021, 16946 / 2020, 12962, 15138, 16922, 18901, 22259, 25418, 26883, 27062, 27231, 27239, 27445, 27664, 28247 & 28350 / 2021, 679, 797, 860, 1098 & 1254/2022 நீதிப்பேராணை மனு எண்கள் 35697/ 2019, 1910, 2655, 2913, 3186, 3230, 3275, 3498, 4117, 4335, 4443, 4878, 5192, 5608, 5695, 5747, 6642, 6727, 7005, 7090, 7521, 8259, 8262 & 8438 / 2022 மற்றும் தொடர்புடைய பல்வகை நீதிப்பேராணை மனுக்கள் (W.M.Ps) – மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் திரு. P.வெங்கடாச்சலம் மற்றும் 44 நபர்களால் வழக்கு தொடரப்பட்டது – வாரிசு சான்றிதழ் – புதிய வழிகாட்டு நெறிமுறைகள் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை,
வருவாய் நிருவாக அலகு, வ.நி. 3(2) பிரிவு

அரசாணை (நிலை) எண்.478 — நாள்: 29.09.2022
சுபகிருது வருடம், புரட்டாசி 12,
திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண் 2096, வருவாய்த் துறை, நாள் 04.11.1981.
2. அரசாணை (நிலை) எண் 581, வருவாய்த் துறை, நாள் 03.04.1987.
3. கடிதம் (நிலை) எண் 1534, வருவாய்த் துறை, நாள் 28.11.1991.
4. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் சுற்றறிக்கை எண் 9/2019, நாள் 24.09.2019.
5. நீதிப்பேராணை மனு எண் 25247/2021 மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட வழக்குகளின் (batch cases) மீதான தீர்ப்புரை நாள் 17.06.2022.
6. அரசு கடித எண் 9633/வ.நி.3(2)/2022-4, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 30.06.2022.
7. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண் வநி.5(3)/17167/2020, நாள் 19.07.2022.
8. நீதிப்பேராணை மனு எண் 25247/2021 மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட வழக்குகளின் (batch cases) மீதான தீர்ப்புரை நாள் 12.08.2022.

******

ஆணை:

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் / தனி துணை வட்டாட்சியர் ஆகியோருக்கு வாரிசு சான்றிதழ் வழங்க அதிகாரமளித்து ஆணையிட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், மற்றவற்றுடன் வாரிசு சான்றிதழ் வழங்குவது வட்டாட்சியர்களின் கடமைகளுள் ஒன்றாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், வாரிசு சான்றிதழ் வழங்குவதற்கான சில வழிகாட்டு நெறிமுறைகளை அரசு வெளியிட்டுள்ளது.

4. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட சுற்றறிக்கையில், வாரிசு சான்றிதழ் வழங்குவது தொடர்பாக கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் விரிவான திருத்தியமைக்கப்பட்ட சுற்றறிக்கை / அறிவுறுத்தல்களை வெளியிட்டுள்ளார்.

5. வகை II-ஐச் சேர்ந்த வாரிசுதாரர்களைக் கண்டறிந்து சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்கள் வாரிசு சான்றிதழ் வழங்காதது குறித்து திருவாளர் P.வெங்கடாச்சலம் மற்றும் 44 நபர்களால் தொடரப்பட்ட நீதிப்பேராணை மனு எண் 25247/2021, 16946/2020 மற்றும் இன்ன பிற நீதிப்பேராணை மனுக்களின் மீதான, தீர்ப்புரை நாள் 17.06.2022-இல் மாண்புமிகு நீதியரசர்கள்.திரு.P.N.பிரகாஷ், திருமதி. R.ஹேமலதா மற்றும் திரு.A.A.நக்கீரன் அடங்கிய, மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் முழு அமர்வில், பின்வருமாறு ஆணையிடப்பட்டுள்ளது:-

" xx xxx xxx xxx xxx xxx xxx xxxxx
xxx xxx xxx xxx xxx xxx xxx xxxx

*65. To sum up, our answers to the questions formulated in paragraph 10, (supra), are as under:*

*A. Legal Heirship is a status governed by the respective personal law of parties through various statutes. The certificates issued by the Tahsildar amount to nothing more than a relationship certificate reflecting the opinion of the Tahsildar as to the relationship of the applicant and others named therein with the deceased. Consequently, the certificate issued by the Tahsildar does not affect the legal right of any party and has no bearing on the status of a legal heir which is conferred on an individual under his/her personal law.*

----xxx xxx xxx xxx xxx xxx ----
----xxx xxx xxx xxx xxx xxx ----

*G. Consequently, the Government of Tamil Nadu is directed to issue a fresh Government order in lieu of Circular No.9 of 2019 without the anomalies pointed out, supra, in particular the usage of the expressions "Class-1" and "Class-II" legal heirs under the Hindu Succession Act, 1956. The Government will also consider incorporating a father, blood brother/sister as eligible applicants for unmarried deceased, as also the administrative remedies of appeal and revision found in paragraphs 9 and 10 of the existing Circular No.9 of 2019. This exercise shall be completed within a period of six weeks from today.*

*66. The order of reference dated 19.01.2022 is, thus, answered on the aforesaid terms. Post the matter on 29.07.2022 for reporting compliance."*

6. மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மேலே விவரிக்கப்பட்ட மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் ஆணைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக வரைவு வழிகாட்டு நெறிமுறைகளுடன் கூடிய விரிவான அறிக்கை / கருத்துருவை அனுப்பி வைக்கும்படி கூடுதல் தலைமைச்செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

7. மேலே ஏழாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் தனது அறிக்கையில், வாரிசு சான்றிதழ் வழங்குவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை பின்வருமாறு வெளியிடலாம் எனத் தெரிவித்துள்ளார்:–

I. வாரிசு சான்றிதழ்களை வகைப்பாடு I மற்றும் வகைப்பாடு II என வழங்கலாம்.

II. இனிவருங்காலங்களில் இறந்த நபரின் யாதொரு குடும்ப உறுப்பினருக்கும் வாரிசு சான்றிதழ் வழங்கப்படலாம். மேலும், இறந்த நபரின் குடும்ப உறுப்பினர்களுக்கு மட்டும், இறந்த நபரின் மதம், பாலினம் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளாது, இறந்த நபரின் குடும்ப உறுப்பினர்களின் பெயர்கள், இறந்த நபருக்கும் குடும்ப உறுப்பினர்களுக்குமான உறவு முறை ஆகியவற்றை உள்ளடக்கி வழங்கலாம்.

இறந்த நபர் திருமணமானவராக இருப்பின் பின்வரும் குடும்ப உறுப்பினர்களை உள்ளடக்கி வாரிசு சான்றிதழ் வழங்கலாம்:–

1. இறந்த நபரின் தந்தை
2. தாய்
3. வாழ்க்கைத்துணை
4. மகன்(கள்)
5. மகள்(கள்)

III. இறந்த நபர் திருமணமாகாதவராக இருப்பின், பின்வரும் நபர்களை உள்ளடக்கி வாரிசு சான்றிதழ் வழங்கலாம்:–

1. இறந்த நபரின் தந்தை
2. தாய்
3. சகோதரர்(கள்)
4. சகோதரி(கள்)

IV. மேலும், பின்வரும் மேல்முறையீட்டு விதிமுறைகளை சேர்க்கவும் பரிந்துரைக்கப்படுகிறது:–

| வ.எண் | தற்போதுள்ள விதிமுறைகள் | உத்தேசிக்கப்படும் விதிமுறைகள் |
|---|---|---|
| 1. | **மேல்முறையீட்டு விதிமுறை:–**<br>வழங்கப்பட்ட வாரிசு சான்றிதழில் சர்ச்சை ஏற்படுகின்ற நேர்வில், | **மேல்முறையீட்டு விதிமுறை:–**<br>தற்போதுள்ள விதிமுறையைத் தொடரலாம். |

| | | |
|---|---|---|
| | சான்றிதழ் வழங்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டிற்குள் சம்பந்தப்பட்ட வருவாய் கோட்டாட்சியரிடம் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்படவேண்டும். | |
| 2. | **சீராய்வு அதிகாரம்:-** சர்ச்சைக்குரிய வாரிசு சான்றிதழ்கள் மீதான சீராய்வு மனுக்களைப் பரிசீலிக்கும் அதிகாரம் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியருக்கு வழங்கப்பட்டுள்ளது. சர்ச்சைக்குரிய வாரிசு சான்றிதழ்கள் மீதான மேல் முறையீட்டின் மீதான ஆணை வழங்கப்பட்ட நாளிலிருந்து 3 ஆண்டிற்குள் விண்ணப்பதாரரால் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட வேண்டும். | **சீராய்வு அதிகாரம்:-** சர்ச்சைக்குரிய வாரிசு சான்றிதழ்கள் மீதான மனுக்களைப் பரிசீலிக்கும் அதிகாரம் சம்பந்தப்பட்ட மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு வழங்கலாம். சர்ச்சைக்குரிய வாரிசு சான்றிதழ்கள் மீதான மேல்முறையீட்டின் மீதான ஆணை வழங்கப்பட்ட நாளிலிருந்து 3 ஆண்டிற்குள் விண்ணப்பதாரரால் சீராய்வு மனுவை தாக்கல் செய்யப்பட வேண்டும். |

8. திருவாளர்கள் P.வெங்கடாச்சலம் மற்றும் 44 நபர்கள் தாக்கல் செய்த நீதிப்பேராணை மனு எண்கள் 25247/2021, 16946/2020 மற்றும் இன்னபிற நீதிப்பேராணை மனுக்களின் மீதான தீர்ப்புரை நாள் 12.08.2022-இல் மாண்பமை உயர்நீதிமன்றம் பின்வருமாறு உத்தரவிட்டுள்ளது:-

*"Pursuant to our directions, the Government has submitted a draft notification for the issuance of Legal Heir Certificates in the State, which we find to be, by and large, in consonance with what we have held in our order dated 17.06.2022.*

*2. Mr.R.Neelkandan, learned Additional Advocate General, seeks six [6] weeks time for issuing and notifying the Government Order. The same is recorded.*

*3. We direct the Registry to post the individual Writ Petitions after eight [8] weeks before the Hon'ble Single Judge who holds this subject roster, for disposal inaccordance with the law laid down by us in our order dated 17.06.2022 and in the light of the new Government Order that would be passed by the Government as stated above."*

9. நீதிப்பேராணை எண் 25247/2021 & 16946/2020 மற்றும் 44 நபர்களால் தொடுக்கப்பட்ட வழக்குகளின் மீதான தீர்ப்புரையில், மாண்புமிகு நீதியரசர்கள் திரு.P.N.பிரகாஷ், திருமதி R.ஹேமலதா மற்றும் திரு.A.A.நக்கீரன் ஆகியோர் அடங்கிய மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தின் முழு அமர்வில், வழங்கப்பட்ட உத்தரவு கூடுதல் தலைமைச் செயலாளரின்/வருவாய் நிருவாக ஆணையரின் பரிந்துரைகள் ஆகியவற்றை அரசு ஆராய்ந்து, சில மாற்றங்களுடன்

வாரிசு சான்றிதழ்கள் வழங்குவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளையும், நடைமுறைகளையும் மேலே 1 முதல் 4 வரை படிக்கப்பட்ட அரசாணைகள் / அரசு கடிதம் / சுற்றறிக்கை ஆகியவற்றிற்கு மாற்றாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பிற்சேர்க்கையில் உள்ளவாறு வெளியிடப்படுகிறது.

10. வாரிசுச் சான்றிதழ்கள் வழங்குவதற்கான மேற்காணும் வழிகாட்டு நெறிமுறைகளையும் நடைமுறைகளையும் பின்பற்றும் பொருட்டு, அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அறிவுறுத்தல்களை வழங்குமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், அரசால் பரிந்துரைக்கப்பட்ட கால அட்டவணை மற்றும் மறுஆய்வு அட்டவணை ஆகியவை சார்நிலை அலுவலர்களால் தவறாமல் கடைபிடிக்கப்படுவதை உறுதி செய்யுமாறும் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

குமார் ஜயந்த்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம் , சென்னை-600 005.
அனைத்து கூடுதல் தலைமைச் செயலாளர்கள்/
முதன்மைச் செயலாளர்கள்/ செயலாளர்கள்,
தலைமைச்செயலகம், சென்னை-600 009.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
நகல்
மின்-ஆளுகை ஆணையர்,
மின்-ஆளுகை இயக்குநரகம் ,
2வது தளம், பி.டி.லீ. செங்கல்வராயன் நாயக்கர் கட்டடம்,
807, அண்ணாசாலை,
சென்னை-600 002.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

-ஓம்/-
பிரிவு அலுவலர்.

//உண்மை நகல்//

நா.கவிதா
7/11/2024
பிரிவு அலுவலர்
7/11/24

**அரசாணை (நிலை) எண் 478, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் [வ.நி.3(2)] துறை, நாள் 29.09.2022–இன் பிற்சேர்க்கை**

**வாரிசு சான்றிதழ் வழங்குவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளும் நடைமுறைகளும்:–**

1. இறந்த நபர் மரணமடைவதற்கு முன்னர் "சாதாரணமாக குடியிருந்துவந்த" எல்லைக்குட்பட்ட வட்டாட்சியரிடம் மின்னணு முறையில் இணைய வழியில் மனுதாரர் விண்ணப்பிக்கலாம். (அன்னார் 6 மாதங்களுக்கும் குறைவாக ஓரிடத்தில் வசித்திருப்பின், மேற்படி வட்டாட்சியர், இறந்த நபர் ஓராண்டிற்கும் மேலாக வசித்துவந்த பகுதியின் எல்லைக்குட்பட்ட வட்டாட்சியரிடமிருந்து, அறிக்கை ஒன்றைப்பெற வேண்டும்).

2. மதம் அல்லது பாலினம் ஆகியவற்றின் அடிப்படையில் யாதொரு வேறுபாடின்றி அனைவருக்கும் பொருந்தும் வகையிலான பொதுவான ஆவணமாக வாரிசு சான்றிதழ் வழங்கப்படவேண்டும்.

(i). இறந்த நபர் திருமணமானவராக இருப்பின் வாரிசு சான்றிதழில் பின்வரும் உறுப்பினர்களின் பெயர்கள் மட்டும் அவர்களின் வாழ்க்கை நிலையுடன் சேர்க்கப்பட வேண்டும்.

1. இறந்த நபரின் தந்தை
2. தாய்
3. வாழ்க்கைத்துணை
4. மகன்(கள்)
5. மகள்(கள்)

(ii). இறந்த நபர் திருமணமாகாதவராக இருப்பின், வாரிசு சான்றிதழில் பின்வரும் உறுப்பினர்களின் பெயர்கள் மட்டும் அவர்களின் வாழ்க்கை நிலையுடன் சேர்க்கப்பட வேண்டும்:–

1. இறந்த நபரின் தந்தை
2. தாய்
3. சகோதரர்(கள்)
4. சகோதரி(கள்)

3. மேலே வகைப்பாடு II–இன்கீழ் வாரிசு சான்றிதழ் வேண்டுவோர், வகைப்பாடு II–இல் குறிப்பிடப்பட்டுள்ள குடும்ப உறுப்பினர்களுள் எவர் ஒருவரும் பிற உறுப்பினர்கள் சார்பாக விண்ணப்பிக்கலாம். விண்ணப்பம் அளிக்கும்போது பின்வரும் விவரங்களை விண்ணப்பதாரர் கட்டாயம் அளிக்க வேண்டும்:–

(1) இறந்த நபரின் இறப்புச்சான்றிதழ் அல்லது வருவாய்க்கோட்ட அலுவலரிடம் காலதாமதமாகப் பெறப்பட்ட இறப்பு சான்றிதழின் பதிவு செய்யப்பட்ட விவரம்.

(2) ஒரு நபர் மரணமடைந்ததாகக் கருதப்படும் நேர்வில், (7 ஆண்டுகளாகக் காணாமல் போனவர் அல்லது குடும்பத்தோடு எவ்விதத் தொடர்பும் இல்லாதிருப்பவர்), அந்நபர் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்ட நீதிமன்றத்தின் ஆணை.

(3) இறந்த நபரின் இருப்பிட ஆதாரங்களாக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று தாக்கல் செய்யப்பட வேண்டும்:–

i. ஆதார் அட்டை;
ii வாக்காளர் அடையாள அட்டை;
iii கடவுச் சீட்டு;
iv. வங்கி கணக்குப் புத்தகம் /அஞ்சலக சேமிப்புப் புத்தகம்;
v. ஓட்டுநர் உரிமம்;
vi. ஓய்வூதிய ஆணை;
vii. இது போன்ற இன்னபிற ஆவணங்கள்.

4. இறந்த நபருடனான உறவுமுறையை மெய்ப்பிக்கும் பொருட்டு, பின்வரும் ஆவணங்களை சமர்பிக்கப்பட வேண்டும்.

1. திருமண பதிவுச்சான்றிதழ்; அல்லது
2. கடவுச் சீட்டு; அல்லது
3. வாக்காளர் அடையாள அட்டை; அல்லது
4. ஆதார் அட்டை; அல்லது
5. சாதிச் சான்றிதழ்; அல்லது
6. ஓட்டுநர் உரிமம்; அல்லது
7. அனைத்து குழந்தைகளின் பிறப்புச் சான்றிதழ்; அல்லது
   அனைத்து குழந்தைகளின் மாற்றுச் சான்றிதழ்.
8. இதுபோன்ற இன்னபிற ஆவணங்கள்.

5. வயது வந்தோர் (Audit) எவரும் உயிருடன் இல்லையெனில், மைனராக உள்ள ஒருவர் தன்னுடைய காப்பாளர் வாயிலாகவோ அல்லது இறந்தநபரின் சகோதரர்(கள்) வாயிலாகவோ அல்லது சகோதரி(கள்) வாயிலாகவோ வாரிசுதாரர் சான்றிதழ் வேண்டி விண்ணப்பிக்கலாம்.

6. தத்தெடுக்கப்பட்டகுழந்தைகள்:–

தத்தெடுக்கப்பட்ட குழந்தைக்கு வாரிசு சான்றிதழ் வழங்கும் நேர்வில், சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்கள் அந்தநபர் சட்டப்படி தத்தெடுக்கப்பட்டதை உறுதி செய்தபின்னர், சான்றிதழ் வழங்கவேண்டும்.

7. சர்ச்சைக்குரிய வாரிசு சான்றிதழ்கள் மீதான மேல்முறையீடு/சீராய்வு செய்வதற்கு பின்வருமாறு வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன:–

**7 (1). மேல்முறையீடு:–**

வட்டாட்சியரின் ஆணையை ஏற்க மறுப்போர் சம்பந்தப்பட்ட வருவாய் கோட்டாட்சியரிடம் சான்றிதழ் வழங்கப்பட்ட நாளிலிருந்து / நிராகரிக்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டிற்குள் அந்தந்த நேர்விற்கேற்ப மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்படலாம்.

**7(2). சீராய்வு:–**

வருவாய் கோட்ட அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட மேல்முறையீட்டின் மீதான ஆணைகளை சீராய்வு செய்யும் அதிகாரம் மாவட்ட வருவாய் அலுவலருக்கு

வழங்கப்படுகிறது. மேலும், மேல்முறையீட்டில் ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டிற்குள் சீராய்வு மனு தாக்கல் செய்யப்படவேண்டும்.

**8. வாரிசு சான்றிதழ் கோரி விண்ணப்பிக்கப்படும் மனுக்கள் பின்வரும் முறைகளில் பரிசீலிக்கப்படும்:–**

1. விண்ணப்பதாரர் இணையவழி முறையில் விண்ணப்பிக்க வேண்டும்.
2. மேற்படி விண்ணப்பங்கள் கிராம நிருவாக அலுவலருக்கு / வருவாய் ஆய்வாளருக்கு அனுப்பப்பட வேண்டும்.
3. கிராம நிருவாக அலுவலர் / வருவாய் ஆய்வாளர் மேற்படி மனுக்களோடு இணைக்கப்பட்ட ஆவணங்களை சரிபார்த்து, ஏற்றுக் கொள்வதற்கான காரணங்கள் / மாற்றங்கள் ஏதேனும் இருப்பின் அதற்கான காரணங்களைத் தெரிவித்து தனது பரிந்துரையை ஒரு வாரத்திற்குள் வருவாய் ஆய்வாளருக்கு / வட்டாட்சியருக்கு அனுப்பவேண்டும். வருவாய் ஆய்வாளர் விசாரணை நடத்தி அறிக்கையை ஒரு வார காலத்திற்குள் வட்டாட்சியருக்கு அனுப்ப வேண்டும். வருவாய் ஆய்வாளரிடம் இருந்து அறிக்கை பெற்ற ஒரு வாரகாலத்திற்குள் வட்டாட்சியரால் சான்றிதழ் வழங்கப்பட வேண்டும்.
4. விண்ணப்பதாரர், குறுஞ்செய்தி ஒன்றைப் பெற்ற பின்னர், இணையத்திலிருந்து வாரிசு சான்றிதழைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**9. பொதுவானஅறிவுறுத்தல்கள்:–**

வாரிசு சான்றிதழ் வழங்கும்போது, பின்வரும் கட்டுப்பாடுகளுடன் கூடிய சான்றிதழ்களை வட்டாட்சியர்கள் / தனித்துணை வட்டாட்சியர்கள் வழங்கக் கூடாது.

(a) இந்த சான்றிதழ் ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லதக்கதாகும்.

(b) குறிப்பிட்டு காலவரம்பை நிர்ணயித்து வழங்கக் கூடாது.

(c) உரிமையியல் நீதிமன்றம் முதலியவற்றில் செல்லதக்கதல்ல. இதுபோன்ற இன்னபிற.

10. தவறான தகவல்களை அளித்ததன் வாயிலாக/ உண்மைகளை மறைத்ததன் வாயிலாக வாரிசு சான்றிதழ் பெறப்பட்டதாக, சான்றிதழ் வழங்கும் அலுவலரின் கவனத்திற்கு கொண்டுவரப்படும்போது, அந்த சான்றிதழை இரத்து செய்யும் பொறுப்பு அந்த அலுவலருக்கு உட்பட்டதாகும்.

குமார் ஜயந்த்
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மைநகல்//

–ஓம்/–
பிரிவுஅலுவலர்.

**//உண்மைநகல்//**

நா. கவிதா 7/11/2024
**பிரிவுஅலுவலர்**

7/11/24